## 28.13 ஊராட்சிகள் – மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்குவது குறித்து உயர்நிலைக்குழுவின் பரிந்துரைகள் மீது அரசு முடிவுகள்

ஊரக வளர்ச்சி (ஐ.ஆர்.டி.1) துறை

அரசாணை (நிலை) எண். 102 நாள் : 21.06.1999

படிக்க :

1. அரசு ஆணை (நிலை) எண். 320, ஊரக வளர்ச்சித் துறை நாள் : 11.11.97.
2. அரசு ஆணை (நிலை) எண். 100, ஊரக வளர்ச்சித் துறை நாள் : 22.05.98.

**ஆணை**

இந்திய அரசியலலைமைப்பு சட்டம், அட்டவணை II–ல் மாநில அரசுகள் உள்ளாட்சி அமைப்புகளுக்கு உரிமைகள், பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கவேண்டிய 29 பொருட்கள் என்னென்னவென்று குறிப்பிடப்பட்டுள்ளன. மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரங்கள் அளிக்க அரசுக்கு பரிந்துரை செய்ய மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்களை அமைப்பாளராகவும், சட்டமன்றத்தில் இடம் பெற்றுள்ள அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகளை உறுப்பினர்களாகக் கொண்டும் உயர்நிலைக்குழு அமைத்து பார்வை ஒன்று மற்றும் இரண்டில் படிக்கப்பட்ட அரசு ஆணைகளில் ஆணைகள் வெளியிடப்பட்டன.

2. உயர்நிலைக்குழுவின் அறிக்கையில் உள்ள பரிந்துரைகளை அரசு கவனமாக ஆராய்ந்தது. அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பரிந்துரைகள் மற்றும் அவற்றின் விவரங்களைக் கொண்ட அறிக்கை சட்டமன்ற பேரவைக்கும் 12.05.1999 அன்று சமர்ப்பிக்கப்பட்டது. இந்த அறிக்கையில் பகுதி – II–ல் வளர்ச்சிப் பிரிவின் பரிந்துரைகளின் கீழ் வரிசை எண்.16 வறுமை ஒழிப்புத் திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் அரசு ஏற்றுக் கொணட்தற்கிணங்க கீழ்க்கண்டவாறு, மேலும் மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரங்கள் உரிமைகள் மறறும் பொறுப்புகளை வழங்கி அரசு ஆணையிடுகிறது.

### 16. வறுமை ஒழிப்புத் திட்டங்கள்

### கிராம ஊராட்சிகள்

1. தனி நபர் பயன்பெறும் வறுமை ஒழிப்புத் திட்டங்களான சுவர்ண ஜெயந்தி சுயவேலை வாய்ப்புத் திட்டம் போன்றவற்றின் பயனாளிகளை தேர்வு செய்து கிராம சபையின் ஒப்புதல் பெற்று உதவி வழங்க ஏற்பாடு செய்தல்.

2 மானியத்தொகை மற்றும் கடன் சொத்துக்கள் ஆகியவற்றை பயனாளிகள் தவறாக பயன்படுத்துவதை ஊராட்சி ஒன்றியங்களுக்கும், மாவட்ட ஆட்சியருக்கும் மாவட்ட அளவிலான சம்மந்தப்பட்ட துறை அலுவலருக்கும் தெரியப்படுத்துதல்.

3. ஜவகர் கிராம வளர்ச்சித் திட்டத்தில் முழு நிதி ஒதுக்கீட்டையும் கிராம ஊராட்சிகளுக்கு வழங்கி கிராம ஊராட்சிகளே கிராம பணியை நிறைவேற்றி கட்டமைப்பு வசதிகளை மேம்பாடு செய்தல்.

4. வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் அடையாள அட்டை வழங்குதல், பணிகளை மேற்பார்வையிட உதவி செய்தல், நடைபெறும் பணிகள் பற்றிய விவர பட்டியலையும் கிராம ஊராட்சிகள் பொதுமக்கள் பார்வைக்கு வைத்தல்.

5. நில மேம்பாட்டுத் திட்டங்களில் திட்டத் தயாரிப்பு பணிகளில் ஊராட்சி ஒன்றியத்திற்கு உதவி புரிதல்.

6. பரவலாக்கப்பட்ட மாவட்டத் திட்டத்தில் திட்டங்களை மாவட்ட அளவில் தயாரிக்க ஏற்பாடுகள் செய்தல்

7. வறட்சி இலக்காகும் திட்டத்தில் உதவி பெறுபவர்களை கண்டறிய உதவுதல்.

8. சமக்ர ஆவாஜ் யோஜனா (தொகுப்பு வீடுகள் திட்டம்) திட்டத்தில் பயனாளிகளை கண்டறிய உதவுதல்.

9. பத்தாவது நிதிக் குழு பரிந்துரைகளின் கீழ் உள்ளாட்சி மன்றங்கள் மானியங்களை சரிவர பயன்படுத்துவதை உறுதி செய்தல் மற்றும் கிராம ஊராட்சிகளில் அனுமதிக்கும் திட்டப் பணிகளை கிராம ஊராட்சி வாரியாக பிரித்து, பணிகள் முடிவு பெற்றுவிட்டதா என்பதை கிராம ஊராட்சிகள் உறுதி செய்யும்.

10. டானிடா உதவியுடன் கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் ஒருங்கிணைந்த ஊரக துப்புரவு மற்றும் நீர்வழங்கல் திட்டத்தில் பயனாளிகளை கண்டறிய உதவுதல் மத்திய ஊரக துப்புரவு திட்டத்தின் கீழ் அனைத்து மாவட்டங்களில் பயனாளிகள் கண்டறிதல்.

11. கட்டணக் கழிப்பிடங்களை கட்டி பராமரித்தல்.

12. சிறுசேமிப்புத் திட்டத்தின் கீழ் முகவர்களுக்கு உதவுதல்.

13. மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சமுதாய வானொலிப்பெட்டி வழங்குதல்.

14. மேம்படுத்தப்பட்ட புகையில்லா அடுப்புத் திட்டத்தின் மீதான செயல்முறை விளக்கங்களுக்கு ஏற்பாடு செய்தல், தேசிய புகையில்லா திட்டத்தில் உதவி பெறுவதற்குரியவர்களை கண்டறிதல்.

**ஊராட்சி ஒன்றியங்கள்**

1. சுவர்ண ஜெயந்தி சுயவேலை வாய்ப்புத் திட்டத்தில் ஒன்றிய அளவில் திட்டம் தயாரித்து, தொழில் நுட்ப இணைப்பு, பயிற்சி, உற்பத்தி மற்றும் பதப்படுத்தும் உள்கட்டமைப்புகள் வலுப்படுத்துதல், விற்பனை வசதிகள் ஏற்படுத்துதல் போன்றவற்றில் உள்ள இடைவெளியை கண்டறிந்து தேவைகளை பூர்த்தி செய்தல். பயனாளிகளை சுய உதவி குழுக்களாகவும் தொழில் அடிப்படையிலான ஒரு தொடர்பு அமைப்புகளை ஏற்படுத்தவும் திட்டத்தை நன்கு நிறைவேற்றவும் கிராம ஊராட்சிகளுக்கு உதவுதல்.

2. கிராம ஊராட்சிகளால் தயாரிக்கப்படும் திட்டங்களை ஆய்வு செய்து தொழில் நுட்ப இசைவு மற்றும் தொழில் நுட்ப உதவிகளை அளித்தல்.

3. நில மேம்பாட்டுத் திட்டங்களின் கீழ் செயல் திட்டங்களை உருவாக்க மாவட்ட ஊராட்சியிடமிருந்து தொழில் நுட்ப ஏற்பினையும் நிதி ஒதுக்கீட்டினையும் பெறுதல்.

4. கிராம ஊராட்சிகளின் ஒத்துழைப்போடு ஊராட்சி ஒன்றியங்கள் திட்டங்களை செயல்படுத்துதல் மேலும் அப்பகுதிக்கான செயல் திட்டங்களை வறுமை ஒழிப்புத் திட்டங்களுடன் ஒருங்கிணைத்தல்.

5. மாவட்ட பரவலாக்கப்பட்ட திட்டப் பணிகளை மேற்பார்வையிட்டு மாவட்ட ஊராட்சிகளுக்கு விவரங்களை வழங்கி உதவி செய்தல், வறட்சிக்கு இலக்காகும் திட்டத்திற்கு திட்டமிடுதல்.

6. உள்ளாட்சி மன்றங்களால் மேற்கொள்ளப்படும் உள்ளமைப்புகள் மேம்பாடு அடைய திட்டமிடுதல் மற்றும் செயல்படுதல்.

7. டானிடா உதவியுடன் கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களின் ஒருங்கிணைந்த அரசு ஊரக துப்புரவு மற்றும் நீர் வழங்கல் திட்டங்களை திட்டமிட்டு செயல்படுத்துதல்.

8. ஊராட்சி ஒன்றியங்களின் வாயிலாக செயல்படுத்தப்படும் குடிநீர் வழங்கல். திட்டங்களை திட்டமிட்டு செயல்படுத்துதல்.

9 மேம்படுத்தப்பட்ட புகையில்லா அடுப்புத் திட்டத்தின் மீதான செயல்முறை விளக்க தேசிய திட்டத்திற்கு திட்டமிட்டு செயல்படுத்துதல்.

**மாவட்ட ஊராட்சி**

1. மாவட்ட ஊராட்சிகள் வறுமை ஒழிப்பு திட்டங்களை மாவட்ட அளவில் ஒருங்ணைந்து தயாரித்தல்.

2. கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியம் அளவில் திட்டமிடுதலில் தொழில் நுட்ப உதவியை மாவட்ட ஊராட்சிகள் வழங்குதல்.

3. மாவட்ட ஊராட்சிகள் வறுமை ஒழிப்புத் திட்டங்களை மேற்பார்வையிட்டு ஆய்வு செய்தல்.

4. மாவட்ட ஊராட்சிகள் வறட்சிக்கு இலக்காகும் பகுதியில் செயல்படுத்தப்படும் திட்டத்தை பார்வையிடுதல் மற்றும் ஆய்வு செய்தல்.

5. மாவட்ட ஊராட்சிகள் ஊரக பகுதிகளில் மகளிர் மற்றும் குழந்தை மேம்பாடு திட்டக்குழுக்களை மேற்பார்வையிட.ல் மற்றும் ஆய்வு செய்தல்.

6. மாவட்ட பரவலாக்கப்பட்ட திட்டத்திற்கான ஏற்பாடுகளை மாவட்ட ஊராட்சிகள் செய்வது மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட திட்டக் குழுவிற்கு துணைபுரிதல்.

7. பத்தாவது நிதிக்குழு பரிந்துரைகளின் கீழ் உள்ளாட்சி மன்றங்களுக்கான மானியங்கள் சார்ந்த திட்டங்களை ஆய்வு செய்தல், மேற்பார்வையிடுதல்.

8. சமக்ர ஆவாஜ் யோஜனா (தொகுப்பு வீடுகள் திட்டம்) திட்டத்தை ஆய்வு செய்தல்.

9. மத்திய அரசின் புதிய வழிகாட்டி நெறிமுறைப்படி வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தை நிறைவேற்றி மேற்பார்வையிடுதல்.

10. டானிடா உதவியுடன் கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் ஒருங்கிணைந்த அரசு ஊரக துப்புரவு மற்றும் நீர் வழங்கல் திட்டத்தை மாவட்ட ஊராட்சிகள் ஆய்வு செய்து மேற்பார்வையிடுதல்.

11. மத்திய ஊரக துப்புரவுத் திட்டத்தை மாவட்ட ஊராட்சிகள் ஆய்வு செய்தல்.

12. தனிநபர் மற்றும் சமுதாய நலனுக்காக சாண எரிவாயு கலன்கள் அமைக்கும் திட்டத்தை மாவட்ட ஊராட்சிகள் திட்டமிடல் மற்றும் ஆய்வு செய்தல்.

13. மேம்படுத்தப்பட்ட புகையில்லா அடுப்புத் திட்டத்தின் மீதான செயல்முறை விளக்க தேசிய திட்டத்திற்கு மாவட்ட ஊராட்சிகள் திட்டமிடல் பணியை மேற்கொள்ளுதல் மற்றும் ஆய்வு செய்தல்.

( ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்